


# கூட்டுக்கு வந்து செல்லுங்கள், பறவைகளே!

## திராவிட மாடல் அரசு

81

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

காலம் காலமாக வணிகம், கல்வி, வேலை வாய்ப்பு போன்றவற்றின் காரணமாக தமிழ் நாட்டில் வாழும் தமிழர்கள் இதர மாநிலங்களில் மட்டுமல்லாது, வெளிநாடுகளுக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். குடும்பத்தை விட்டு, வீட்டை விட்டு, நிலங்களை விட்டுச் செல்லும் அவர்களில் பெரும்பாலானோருக்கு, அந்த நாடுகளில் நிரந்தரமாக வாழ குடியுரிமை வழங்கப்படுவதில்லை.

என்றாலும், கடந்த 60 அல்லது 70 ஆண்டு களுக்கு முன்பாக வெளிநாடுகளுக்குச் சென்று, அங்கே குடியுரிமை பெற்று, பல தலைமுறைகளாக குடும்பத்துடன் தமிழர்கள் பலர் வாழ்ந்து வருகின்றனர். இன்று அவர்கள் எல்லோரும் அயல் தமிழர்களாகிவிட்டாலும், அவர்களின் நினைவுகளிலும் பழக்கவழக்கங்களிலும் தமிழும் தமிழ்நாடும் தமிழ்ப் பண்பாடும் செம்புலப் பெயல்..!

ஒரு தலைமுறை என்பது சராசரியாக 33 ஆண்டுகள் என்று கணக்கிடப்படுகிறது. எனில், ஒருவர் 70 ஆண்டுகளுக்கு முன்பாக வெளிநாடு சென்றிருந்தால், இரண்டு தலைமுறை களைக் கண்டிருக்கும் அந்தக் குடும்பம். மேலை நாடுகளில் ஏற்படும் பண்பாட்டுத் தாக்கத்தினால், மேலே சொல்லப்பட்ட ‘செம்புலப் பெயல்’, ஒன்று அல்லது இரண்டு



தலைமுறைக்கு மேலே கடத்தப்படுவது கடினம். அப்படிப் பார்த்தால், அடுத்து வரும் தலைமுறைகள் தங்களின் வேர்களை மொத்தமாக மறந்துபோகும் நிலை உண்டு.

பிறந்த மண்ணுடன் கூடிய தொப்புள்கொடி அறுந்துவிடக் கூடாது, அதனுடனான உறவு, விட்ட குறை தொட்ட குறையாகவேனும் இருக்க வேண்டும் என்பதற்காக நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான **‘திராவிட மாடல் அரசு’** செயல்படுத்தி வருவதுதான் ‘வேர்களைத் தேடி’ திட்டம்.

**தற்சமயம் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் அயல் தமிழ் இளைஞர்கள் சிலரின் கருத்துகள்...**



“இந்தப் பயணம், எங்களின் தமிழ் அடையாளம் பற்றி மேலும் பல புதிய புரிதல்களைத் தருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அளித்த வரவேற்பில் நாங்கள் மெய்சிலிர்த்துப் போனோம்...”

**-ப்ரியன் ரெத்தி, தென் ஆப்பிரிக்கா**



“இந்தப் பண்பாட்டுப் பயணத்தின் மூலம், தமிழ்நாட்டைப் பற்றி மட்டுமல்லாது, என்னுடன் பயணிக்கும் இதர நாடுகளில் உள்ள தமிழர்களின் பண்பாடு, மரபுகள் குறித்தும் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக் கிறது...”

**-ஹெசாவர், ஆஸ்திரேலியா**



“தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ்ப் பண்பாட்டை அறிந்துகொள்வதால், எங்கள் நாட்டில் எங்களுடைய பண்பாட்டையும் மேம்படுத்திக் கொள்ள முடியும்...”

**-நவீன்ராஜ், மலேசியா**



“தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம், மரபுகள் போன்ற வற்றைப் பார்த்து கற்றுக் கொள்வ தன் மூலம், எங்களின் அழிந்து வரும் கலை, கலாச்சார மரபு களைப் பாதுகாக்க முடியும்...”

**-துயிஷரா, இலங்கை**



“இந்தப் பயணத்தின் வழியே எங்கள் முன்னோர்களைப் பற்றி அறிந்துகொள்ளப் போகி றோம் என்பதே பெரிய ஆர்வத்தை ஏற்படுத்துகிறது...”

**-யாஷ்மி, மாலத்தீவு.**



### ஆண்டுக்கு 100 இளைஞர்கள்

வெளிநாடுகளில் இரண்டு தலைமுறைகளுக்கு மேல் வசிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களின் வாரிசுகள், 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளநிலை, முதுநிலை, ஆராய்ச்சிப் படிப்பு பயின்று வரும் மாணவர்கள், அவர்கள் பரவியிருக்கும் நாடுகளில் உள்ள தமிழர்களின் விகிதாச்சார அடிப்படையில், ஆண்டுக்கு 100 இளைஞர்களை தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை மூலமாகத் தேர்வு செய்கிறது. அதன் பிறகு,



**15 நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 2024 ஆகஸ்ட் 1 முதல் 15 ஆம் தேதி வரை, 15 நாட்களுக்கு தமிழ்நாட்டில் பயணம் மேற்கொண்டுள்ளனர்.**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் அரசு செலவில், தமிழ்நாட்டின் தொன்மை வாய்ந்த பண்பாட்டுத் தளங்களுக்கு ‘2 வார கலை / பண்பாட்டு / வரலாற்றுச் சுற்றுலா’வுக்கு அழைத்து வரப்படுவார்கள்.

இங்கே வந்தவுடன், தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக, தமிழ்நாட்டின் முக்கிய பல்கலைக்கழகங்களுடனான கலந்துரையாடல், கருத்துப் பரிமாற்றம் போன்றவற்றிற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. இதன் மூலம் தமிழ்நாட்டின் பண்டைய கலாச்சாரத்தினையும், தமிழரின் வாழ்வியல் நெறியையும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பாக இது அமையும்.

### 15 நாடுகளிலிருந்து 15 நாட்கள்

அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான இந்த **‘வேர்களைத் தேடி’** திட்டத்தை 2023 மே 24 அன்று சிங்கப்பூரில் நடைபெற்ற கலை பண்பாட்டு நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார், நமது முதலமைச்சர். அதன் அடிப்படையில், கடந்த ஆண்டு நான்கு நாடுகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் இந்தப் பண்பாட்டுப் பயணத் திட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு, தென் ஆப்பிரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை, பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய 15 நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 2024 ஆகஸ்ட் 1 முதல் 15 ஆம் தேதி வரை, 15 நாட்களுக்கு தமிழ்நாட்டில் பயணம் மேற்கொண்டுள்ளனர். இந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு அவர்கள் தங்கள் நாடு களுக்குத் திரும்பிச் செல்லும்போது, கடல் தாண்டிய தமிழர்களாக மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் கலாச்சாரத் தூதுவர்களாகவும் செல்வார்கள்.

ஆம்... இரை தேடிப் பறந்தாலும், திசை மாறித் திரிந்தாலும்... கூடென்பது நம் தாய்மண் தானே...!

**...சாதனை தொடரும்**

## தங்கத்திற்கும் மேலான பதக்கம் தாய்மை!

பாரிஸ் ஒலிம்பிக், ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று நாட்டுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் நீரஜ் சோப்ரா. அவர் வெள்ளிப் பதக்கம் வென்றது குறித்து, அவரது தாயார் தெரிவித்த கருத்தும், தங்கம் வென்ற பாகிஸ்தான் வீரரின் தாயார் தெரிவித்த கருத்தும், அந்தப் பதக்கங்களை விடவும் மேலானதாக உள்ளது என மக்கள் கொண்டாடி வருகின்றனர். பத்திரிகையாளர் கோவி.லெனின் தனது முகநூலில் இப்படிப் பதிவிட்டுள்ளார்.

“ஈட்டி எறியும் போட்டியில் தங்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கத்தை வென்றி ருக்கிறார். அவரைவிட கூடுதலான தூரத்திற்கு ஈட்டியெறிந்து (92.97 மீட்டர்) ஒலிம்பிக் சாதனை படைத்து தங்கப் பதக்கத்தை வென்றிருப்பவர் பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதீம்.

எல்லா இந்தியர்களையும் போலவே சோப்ராவின் பெற்றோரும் தங்கள் மகனின் தங்கப் பதக்கத்தை எதிர்பார்த்தே இருந்தனர். ஆனால், வெள்ளியை வென்றாலும் மகன் மகன்தானே! அதில் நீரஜ் சோப்ராவின் தாய் சரோஜாதேவிக்குப் பெருமைதான். அந்தப் பெருமையை விடவும் அவரிடமுள்ள தாய்மைப் பண்பு வெளிப்பட்டு, ஒலிம்பிக் அரங்கில் மட்டுமின்றி உலகம் முழுவதும் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

“என் மகனுக்கு வெள்ளிப் பதக்கம் என்பதில் எனக்கு மகிழ்ச்சி. தங்கப்பதக்கம் வென்ற அந்தப் பையனும் எனக்கு குழந்தைதான். ஒவ்வொருவரும் கடுமையான பல பயிற்சிகளுக்குப் பிறகே இந்தப் போட்டிக்கு வந்திருக்கிறார்கள். என் மகன் போலவே அந்தப் பையனுக்கும் பிடித்த சாப்பாட்டை நான் சமைத்துக் கொடுப்பேன்” என்று மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் சொல்லியிருக்கிறார், சோப்ராவின் தாய்.

விளையாட்டு என்பது தோழமையான போட்டிக்களம். நிறம், மொழி, இனம், மதம், சாதி எல்லாவற்றையும் கடந்த திறமைக்கான, நட்புறவு மிகுந்த போட்டி. அதை அர்ஷத் நதீமும், நீரஜ் சோப்ராவும் ஒலிம்பிக்கில் நிரூபித்து தங்கமும் வெள்ளியும் பெற்ற நிலையில், அதை விடவும் உயர்வான பதக்கத்தை தன் தாய்மை உணர்வினால் வென்றிருக்கிறார் நீரஜ் சோப்ராவின் அம்மா.” எனக் குறிப்பிட்டுள்ளார். பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதீமின் தாயாரும், நீரஜ் சோப்ராவும் தன் மகன்போலத்தான் எனக் கருத்து தெரிவித்து, மக்களின் மனங்களை வென்றுள்ளார். மத அடிப்படைவாத பிற்போக்கு வாதிகளுக்கு இரண்டு தாய்மார்களும் அன்பினால் சம்மட்டி அடி அடித்துள்ளனர்.

## ஃப்ளாஷ்பேக்





சி.ஆறுமுகம்

### வாழ்க்கையில் அடைந்த மனநிறைவு!

கழகப் பணியில் 35 ஆண்டுகளுக்கு மேல், உற்சாகம் குறையாமல் பணியாற்றி வருகிறேன். தலைவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தபோது, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. அன்றுதான் என் வாழ்க்கையில் மிகப் பெரிய மகிழ்ச்சி அடைந்தேன். கழக வளர்ச்சி நிதி அளிக்க சென்றபோது, “எவ்வளவு கொண்டு வந்தாய்?” எனக் கேட்டார். நான், எனது சிறுபங்களிப்பாக 1,000 ரூபாய் நிதி அளித்து, மனநிறைவுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டு வீடு திரும்பினேன்.

**– சி.ஆறுமுகம், 33–வது வட்டக் கழகச் செயலாளர், பொள்ளாச்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ஓராண்டுக்குள் எழுச்சி!

1950-ஆம் ஆண்டு, ‘ஆரிய மாயை’ நூல் எழுதியதற்காக கைது செய்யப்பட்டார் பேரறிஞர் அண்ணா. அதைக் கண்டித்து, சென்னையில் கழகத்தின் தலைமைச் செயற்குழு கூடி, எழுத்துரிமை, பேச்சுரிமையில் அரசின் அடக்குமுறையை எதிர்க்கத் தீர்மானித் தது. அப்போது, ராஜாஜிக்கு கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தின் போது, கழக முன்னோடி அப்பாதுரையார் தடியடிக்கு ஆளானார். குன்றத்தூரில், கழகக் கூட்டத்துக்கு விதிக்கப்பட்ட தடையை மீறியபோது, நடந்த துப்பாக்கிச்சூட்டில், ‘மாங்காடு’ குட்டி என்கிற கழகத் தோழர் இறந்தார். தொடங்கிய ஓராண்டுக்குள் மக்கள் மனதில் வலுவாய் அமர்ந்தது தி.மு.கழகம்

## திராவிடத்தால் வாழ்கிறோம்

567

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங் கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.